**an International CBSE Finger Print School**
**Coimbatore**

# இயல் 5.2: பாடறிந்து ஒழுகுதல்

GRADE- VIII

QUESTION BANK

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. **கலித்தொகை - குறிப்பு எழுதுக.**

- கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- கலிப்பா என்னும் பாவகையால் ஆனது.
- 150 பாடல்களை கொண்டது.
- குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி, பாலைக்கலி என்னும் ஐந்து பிரிவுகளை உடையது.
- கலித்தொகையைத் தொகுத்தவர் நல்லந்துவனார்

2. **நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.**

- இல்வாழ்க்கை என்பது ஏழைகளுக்கு உதவி செய்தல்.
- பாதுகாத்தல் என்பது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்.
- அன்பு என்பது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல்.
- அறிவு என்பது அறிவற்றவர்கள் கூறும் சொற்களைப் பொறுத்தல்.

- செறிவு என்பது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல்.
- நிறை என்பது மறைபொருளை அழியாமல் காத்தல்.
- முறை என்பது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல்.
- பொறை என்பது தம்மை இகழ்பவரையும் பொறுத்தல்.

இத்தகைய பண்புகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்று நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்

.